பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 04 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u> -

1. தேச நலனை கருத்தில் கொள்ளாமல் காங்கிரஸ் கட்சி குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டியுள்ளார்.
2. கச்சத்தீவு குறித்து பேசி வரும் பிஜேபி-யினர் சீன ஊடுறுவல் குறித்து பேச தயங்குவதாக காங்கிரஸ் குற்றம்சாட்யுள்ளது.
3. மேற்குவங்கம், மகாராஷ்டிரா உள்ளிட்ட ஆறு மாநிலங்களுக்கு தேர்தல் சிறப்பு பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
4. தேசிய ஒலிபரப்புக் கொள்கை-2024-க்கான பரிந்துரைகளை இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

------ *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

[]<<<>>>[]

தேச நலனை கருத்தில் கொள்ளாமல் காங்கிரஸ் கட்சி குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டியுள்ளார்.

உத்தராக்கண்ட் மாநிலம் நைனிட்டால், உதம்சிங்நகர் மக்களவைத் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பிஜேபி மூன்றாவது முறையாக மத்தியில் ஆட்சி அமைத்தால் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாகா இந்தியா வளர்ச்சியடையும் என்றார்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு, தூய்மையான நாடாக மாறுவதற்கு வழிவகுக்கப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

கச்சத்தீவு குறித்து பேசி வரும் பிஜேபி கட்சியினர் சீன ஊடுறுவல் குறித்து பேச தயங்குவதாக காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.,

அக்கட்சியின் மூத்த தலைவர் திரு மணிஷ் திவாரி இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்திய எல்லைப்பகுதியில் கடந்த நான்கு ஆண்டுகளாக சீன ராணுவத்தினர் ஊடுறுவி வருவதாகக் கூறினார்.

முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி 1971-ஆம் ஆண்டு எடுத்த உறுதியான நடவடிக்கைகளால் இந்தியாவின் பூகோள அமைப்பே மாறியுள்ளதை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்றும் திரு மணிஷ் திவாரி குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஆறு மாநிலங்களில் மக்களவைத் தேர்தலுக்கான சிறப்புப் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் இன்று நியமித்துள்ளது.

மேற்குவங்கம், உத்திரபிரதேஷ், மகாராஷ்டிரா, பீகார், ஆந்திர பிரதேசம், ஒடிஸா ஆகிய ஆறு மாநிலங்களுக்கு இந்த சிறப்புப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் தொகை ஏழு கோடிக்கும் அதிகமாக உள்ள மாநிலங்களில் நியமிக்கப்பட்டுள்ள இந்த சிறப்புப் பார்வையாளர்கள் ஒட்டுமொத்த பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புப் படையினரின் செயல்பாடுகள், வாக்கு எந்திரங்கள் உள்ளிட்டவற்றை கண்காணிக்கவுள்ளனர்.

தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், ஜனநாயக ரீதியிலும் நடைபெறுவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் இவர்கள் கண்காணிக்க உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

பொதுவாக மாநில தலைநகரங்களிலிருந்து செயல்படும் இந்த சிறப்புப் பார்வையாளர்கள் தேவை ஏற்படும்போது பிரச்சினைகள் உள்ள பகுதிக்குச் சென்று அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார்கள் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தாங்கள் பணியாற்றும் மாநிலத்தின் எல்லைப்பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையிம் இவர்கள் மேற்கொள்வார்கள்.

[]<<<>>>[]

தமிழ்நாடு, ஆந்திர பிரதேஷ், கர்நாடகா, உத்திரபிரதேஷ், ஒடிஸா ஆகிய மாநிலங்களுக்கு சிறப்பு செலவின பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

தேர்தலில் பணபலத்தை தடுக்கவும், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை தீவிரமாக கண்காணிக்கவும் தேவையான நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்ள உள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதற்கிடையே தமிழகத்திற்கு சிறப்பு தேர்தல் செலவின பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற மத்திய வருவாய்த்துறை அதிகாரி திரு பாலகிருஷ்ணன், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதா சாஹூ ஆகியோர் தேர்தல் செலவினங்களை கண்காணிப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

வருமான வரித்துறை, அமலாக்கத்துறை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் அதிகாரிகளுடனும் தேர்தல் செலவின கண்காணிப்பு குறித்தும், பணபலத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவிகள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.,

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் 17 வேட்பாளர்கள் கொண்ட பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஆந்திரபிரதேசத்தில் முன்னாள் அமைச்சர் திரு பள்ளம் ராஜு- காக்கிநாடா தொகுதியிலும், ஆந்திர பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி ஒய் எஸ் ஷர்மிளா ரெட்டி கடப்பா தொகுதியிலும், திரு ஜெ டி சீலம்- பப்பட்லா தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

ஆந்திர பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 114 வேட்பாளர்கள் கொண்ட பட்டியலையும் காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

ஒடிஸாவில் கந்தம்மால் மக்களவைத் தொகுதியில் திரு அமித்சந்த் நாயக் போட்டியிடுகிறார்.

அம்மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 49 பேர் கொண்ட பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

பீகார் மாநிலத்தில் கத்திகார் மக்களவைத் தொகுதியில் முன்னாள் அமைச்சர் திரு தாரிக் அன்வர் போட்டியிடுகிறார்.

[]<<<>>>[]

அஸ்ஸாம், பீகார், ஜார்க்கண்ட், ஒடிஸா மற்றும் ஆந்திரபிரதேசத்தில் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகளை பணியிடமாற்றம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களும் ஆலோசனை நடத்திய பின், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பணியிடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கீழமை அதகாரியிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு உடனடியாக பணியிலிருந்து விடுபட வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

நாட்டின் வடஎல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.,

புதுதில்லியில் இன்று ராணுவ தளபதிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், எல்லைப் பகுதியில் முப்படைகளும் உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும், அமைதிக்கான நடவடிக்கைகளும் தொடரும் என்றும் தெரிவித்தார்.

மேற்கு எல்லைப்பகுதியில் செயல்பட்டு வரும் ராணுவம் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பணிகளையும் அமைச்சர் பாராட்டினார்.

தீவிரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க பாதுகாப்புப்படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளை அரசு நிர்வாக அமைப்புகளின் அதிகாரிகள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்புப் பணிகளினால் அரசு நிர்வாகம் சீராக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டுவர ராணுவம் எடுத்து வரும் நடவடிக்கைகளையும் திரு ராஜ்நாத்சிங் பாராட்டினார்.

**[]<<<>>>[]**

தேசிய ஒலிபரப்புக் கொள்கை-2024-க்கான பரிந்துரைகளை இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது.

மத்திய தொலைத் தொடர்பு அமைச்சகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒலிபரப்புத்துறை முக்கிய பங்காற்றி வருவதாகவும், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளது.

உலகின் பொருளாதார மையமாக இந்தியாவை உயர்த்துவதற்கான இலக்கை எட்டுவதற்கு ஒலிபரப்புத்துறையில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் அதில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கான ஒலிபரப்பு சேவையை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளும் அதில் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில் அரசின் ஒலிபரப்புத்துறை தனியார் துறையின் போட்டிகளை எதிர்கொள்வதற்கான வழிவகைகள் குறித்தும் தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

**[]<<<>>>[]**

சத்திஷ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டம் பஸ்தர் பகுதியில் பாதுகாப்புப் படையினர் இன்று மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

லெந்திரா வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும் - மாவோயிஸ்டுகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டையின்போது இவர்கள் கொல்லப்பட்டதாக கூட்டுப்படையினர் தெரிவித்தனர்.

தீவிரவாதிகளிடமிருந்து இலகு ரக இயந்திர துப்பாக்கி, பேரல் குண்டுகள் மற்றும் தளவாடப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

தீவிரவாதிகளை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஒடிஷா இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

காஷிபா ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – தைவானின் **chia yi** மஇணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-1 என்ற செட் கணக்கில் தைவானின் **Yu yun li** - ஹாங்காங்கின் **Hong yi cody wong** இணையை வென்றது,

***End of News***